# திருவருகைக்காலம் முதல் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

இறைவன் மனிதனைத் தேடி வரும் காலம். நம்மைத் தேடி வரும் இறைவனை எத்தகைய தயாரிப்போடு வரவேற்க போகிறோம்? வீட்டுத் தலைவரின் வருகைக்காக விழித்திருக்கும் பணியாளரைப் போல நாமும் விழித்திருக்க இன்றைய திருவருகைக் கால முதலாம் ஞாயிறு வழிபாட்டுக் கொண்டாட்டம் நம்மை வரவேற்கின்றது.

இன்றைய முதல் வாசகத்திலே இஸ்ரயேல் மக்களுடைய நிலைமையை எண்ணி இறைவனிடம் மன்றாடுகின்றார் இறைவாக்கினர் எசாயா. நம்மையே நாம் இறைவனிடம் ஒப்படைத்து மனதில் நம்பிக்கையையும், வாழ்வில் விசுவாசத்தையும், செயலில் சேவையையும் வெளிப்படுத்தி வாழ இன்றைய முதல் வாசகம் அழைக்கின்றது.

இரண்டாம் வாசகத்திலே இயேசு கிறிஸ்துவின் வருகையை எதிர்கொள்ள தூய்மையுடையவர்களாக வாழ இறைவன் நம்மை அழைக்கின்றார் என்பதை தூய பவுலடியார் நமக்கு எடுத்துரைக்கின்றார்.

இன்றைய நற்செய்தியிலே கடவுளின் வருகை எதிர்பாராமல் வருவது, திடீரென வருவது அதனை எதிர்கொள்ள எந்நேரத்திலும் தயார்நிலையில் வாழ இயேசு எச்சரிக்கை விடுப்பதை கவனத்தில் கொள்வோம்.

“திட்டமிட்ட வாழ்வு திடமான வாழ்வு;

செப்பனிட்ட பாதை செம்மையான பாதை;

சீர்செய்யப்பட்ட பூமி செழிப்பான பூமி;

தயார் செய்யப்பட்ட நிகழ்வு சிறப்பான நிகழ்வு;

ஆயத்தம் செய்யப்பட்ட ஆன்மா அழியாத ஆன்மா”

ஆகவே உலக முடிவுக்கும் கடவுளின் வருகைக்கும் நாம் நம்மையே தயாரிக்கவும் தகுதியாக்கிக் கொள்ளவும் இறைவனை மன்றாடுவோம். இத்திருப்பலியிலே இறையாசீர் பெறுவோம்.

**மன்றாட்டுக்கள்:**

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. விழிப்போடு காத்திருக்க அழைப்பவரே இறைவா!

உமது வருகைக்காக எங்களைத் தயாரிக்கும் நாங்கள் விழிப்போடு செயல்பட்டு, நிகழ்கால கடமைகளில் கவனமுடனும், கனிவுடனும், கருத்துடனும் செய்வதற்குத் தேவையான மனநிலையைத் தந்து காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. திராட்சைக் கொடிகளின் மீது பரிவு காட்டுபவரே இறைவா!

நாங்கள் பாவத்திற்கு அடிமையாகாமல் தீமைகளிலிருந்து விடுபடுவதற்கு உமது அருளையும் வழிகாட்டுதலையும் உணர்ந்து வழிநடப்பதற்கான உமது ஞானத்தை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. தெய்வீக மாட்சிமையுடன் இறுதி நாளில் வரவிருக்கின்றவரே இறைவா!

நாங்கள் உலகப் பொருள், பதவி, சுகம், அறிவு இவற்றிற்காகவோ, எங்களுடைய பெயருக்காகவோ, புகழுக்காகவோ உழைக்காமல் இறைவனின் மகிமைக்காகவே கடமைகளை கனிவுடனே செய்து ஆயத்தம் செய்யப்பட்ட ஆன்மாவாக கடவுளின் வருகையை எதிர் கொள்ள உமது அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. உறவின் ஊற்றே இறைவா!

இன்றைய காலச் சூழ்நிலையிலே அறிவியல் வளர்ச்சியில், உலகமயமாக்கலின் அடிமைத்தனத்தில் நிம்மதியிழந்து, வாழ்வின் பொருள் இழந்து, நம்பிக்கையிழந்து காணப்படுகின்ற மக்களிடையே நாங்கள் உறவை வளர்க்கின்ற உன்னத மக்களாக வாழ உமது அருளைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. ஒளிதந்து வழிநடத்தும் உன்னத இறைவா!

இன்று எம் பாரத நாட்டிற்காகப் பெரிதும் உழைத்து உமது அருள்மறையை ஆலென வளரச் செய்த புனித பிரான்சிஸ் சவேரியாரின் வழிநின்று உமது பணியைச் சான்றுடன் ஆற்றிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. லூயிஸ் ரெக்ஸ்லின், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com